**செய்தி வெளியீடு எண்: 214** **நாள்: 27.03.2018**

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் இன்று (27.3.2018) சேலம் மாவட்டம், எடப்பாடி வட்டம், பக்கநாட்டில் நடைபெற்ற விழாவில் ஆற்றிய உரை**

---

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா தெய்வத்தை வணங்கி,

எடப்பாடி சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட இரண்டு இடங்களிலே, கொங்கணாபுரம் ஒன்றியம், சமுத்திரம் ஊராட்சியிலே புதிய ஆரம்ப சுகாதார நிலையம் திறப்பு விழா, பக்கநாடு பகுதியிலே புதிய ஆரம்ப சுகாதார நிலையம் துவக்க விழா நிகழ்ச்சி மற்றும் குன்னூர் பகுதியிலே புதிய ஆரம்ப சுகாதார நிலையம் திறப்பு விழா நிகழ்ச்சி,

இந்த இனிய நிகழ்ச்சியிலே கலந்துகொண்டு சிறப்பாக உரையாற்றிய மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் டாக்டர் சி.விஜயபாஸ்கர் அவர்களே,

வரவேற்புரை நிகழ்த்திய மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களே,

இந்த சிறப்பான நிகழ்ச்சியிலே கலந்துகொண்டு சிறப்பித்துக் கொண்டிருக்கின்ற சட்டப்பேரவை உறுப்பினர் திரு.ராஜா அவர்களே, திரு.மருதமுத்து அவர்களே, திரு.சின்னத்தம்பி அவர்களே,

சேலம் மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்க தலைவர் திரு.சின்னசாமி அவர்ளே, முன்னாள் ஊராட்சி ஒன்றிய பெருந்தலைவர் திரு.மணி அவர்களே, முன்னாள் மாவட்ட ஊராட்சிமன்ற உறுப்பினர் அவர்களே, மற்றும் இந்த நிகழ்ச்சியிலே கலந்துகொண்டு சிறப்பித்துக் கொண்டிருக்கின்ற சுகாதாரத் துறையை சேர்ந்த உயர் அதிகாரிகளே, மருத்துவர்களே, வருகை தந்திருக்கின்ற அரசுத் துறையைச் சேர்ந்த அலுவலர்களே, வருகை தந்திருக்கின்ற கழகத்தினுடைய முன்னோடி நிர்வாகிகளே,

பெரியோர்களே, தாய்மார்களே, பத்திரிகை மற்றும் ஊடக நண்பர்களே, அனைவருக்கும் பணிவான வணக்கத்தை இந்த நேரத்திலே சமர்ப்பித்து,

நீண்ட காலமாக பக்கநாடு மக்கள் இங்கே சிகிச்சை பெறக்கூடிய சூழ்நிலையை உருவாக்கித் தரவேண்டுமென்று வைத்த கோரிக்கையை நிறைவேற்றுகின்றவிதமாக இன்றையதினம் மாண்புமிகு அம்மாவினுடைய அரசால் உங்களுடைய பகுதியிலேயே ஒரு புதிய

ஆரம்ப சுகாதார நிலையம் திறக்கப்பட்டிருக்கின்றது. கிராமத்திலே வாழ்கின்ற மக்களுக்கு அந்தப் பகுதியிலேயே சிகிச்சை செய்யக்கூடிய ஒரு அருமையான மருத்துவமனையை நாங்கள் தந்திருக்கின்றோம். இந்த மருத்துவமனைக்கு இதே பகுதியில் ரூபாய் 60 இலட்சம் மதிப்பீட்டில் ஒரு புதிய கட்டடம் கட்டித் தரப்படும் என்ற மகிழ்ச்சியான செய்தியை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன். இந்த சுற்றுவட்டாரத்தில் இருக்கின்ற மக்கள் ஏதாவது நோய்வாய்ப்பட்டால், பக்கநாடு பகுதியில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு வந்து சிகிச்சை பெற்றுக் கொள்ளலாம். அந்த வசதியை அம்மாவினுடைய அரசு உருவாக்கித் தந்திருக்கின்றது.

2011–ஆம் ஆண்டு மாண்புமிகு அம்மா அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்ற பிறகு, சுகாதாரத் துறைக்கு முக்கியத்துவம் கொடுக்கும்வகையில், கிராமப்புற ஏழை, எளிய மக்கள் பயனடையும்விதமாக 30 படுக்கைகள் கொண்ட மேம்படுத்தப்பட்ட புதிய ஆரம்ப சுகாதார நிலையம் இன்றைக்கு தரம் உயர்த்தப்பட்டுள்ளது. மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நியைம் என்று குறிப்பிடுகின்றபொழுது, சித்தூரில் 30 படுக்கைகள் கொண்ட ஆரம்ப சுகாதார நிலையத்தை, மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையமாக அம்மா அவர்கள் தரம் உயர்த்தி தந்தார்கள், அதற்காக ரூபாய் ஒரு கோடி நிதி ஒதுக்கி கட்டடமும் கட்டித் தந்தார்கள். அதேபோல, கெங்கவல்லியில் இருக்கின்ற ஆரம்ப சுகாதார நிலையத்தை மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையமாக தரம் உயர்த்தப்பட்டு, அதற்கு ரூபாய் 1 கோடி கொடுத்து அங்கேயும் கட்டட வசதி செய்து கொடுத்தார்கள். அதேபோல, கொங்கணாபுரத்தில் இருக்கின்ற ஆரம்ப சுகாதார நிலையம் தரம் உயர்த்தப்பட்டு, மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையமாக தரம் உயர்த்தி, அதற்கு ரூபாய் 1 கோடி கொடுத்து அங்கேயும் கட்டட வசதி செய்து கொடுத்தார்கள். மூன்று ஒன்றியங்களிலுமே, ஏழை, எளிய மக்கள் சிகிச்சை பெற வேண்டுமென்பதற்காக அம்மா அவர்கள் அரசு அந்த மருத்துவமனைகளை தரம் உயர்த்தியிருக்கின்றது என்பதை இந்த நேரத்திலே மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கின்றேன். அதுமட்டுமல்லாமல், கடந்த 7 ஆண்டுகளில் சேலம் மாவட்டத்தில் மட்டும் 11 புதிய ஆரம்ப சுகாதார நிலையங்கள் துவக்கப்பட்டுள்ளது. நம்முடைய தொகுதி என்று எடுத்துக்கொண்டால், கோனேரிபட்டி, குன்னூர், சமுத்திரம், பக்கநாடு என 4 இடங்களில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் இன்றைக்கு துவங்கப்பட்டுள்ளது என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

அதேபோல, இன்றைக்கு ஆரம்ப சுகாதார நிலையம் ரூபாய் 20 கோடி மதிப்பீட்டில் மகப்பேறு புதிய கட்டடம், மருத்துவர் குடியிருப்பு கட்டடம், செவிலியர் குடியிருப்புக் கட்டடம் உள்ளிட்ட கட்டட வசதியும் அம்மாவினுடைய அரசு செய்து கொடுத்திருக்கின்றது. எடப்பாடி தாலுகா அரசு மருத்துவமனை ரூபாய் 3.5 கோடி மதிப்பீட்டில் மகப்பேறு பிரிவு, விபத்து மற்றும் அறுவை சிகிச்சை

கட்டடம் கட்டப்பட்டு பயன்பாட்டிற்கு வந்திருக்கின்றது. ரூபாய் 2 கோடி மதிப்பீட்டில் தனியார் நிறுவன பங்களிப்புடன் எடப்பாடி அரசு மருத்துவமனையில் நவீன டிஜிட்டல் எக்ஸ்–ரே மற்றும் நவீன ஸ்கேன் வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது, ஒரே நிமிடத்தில் எக்ஸ்ரே எடுத்துக் கொடுத்துவிடுவார்கள். மேட்டூர் அரசு மாவட்ட தலைமை மருத்துவமனை, வாழப்பாடி அரசு மருத்துவமனையில் 12.3 கோடி மதிப்பீட்டில் டயாலிசிஸ் சிகிச்சைப் பிரிவு, பச்சிளங்குழந்தைகள் பாதுகாப்புப் பிரிவு மற்றும் 30 படுக்கை கொண்ட கூடுதல் கட்டடம், இன்றைக்கு தொடங்கப்பட்டு பயன்பாட்டிற்கு வந்திருக்கிறது. அரசு மோகன்குமாரமங்கலம் மருத்துவக் கல்லூரியில் 40 கோடி ரூபாயில் உலகத்தரம் வாய்ந்த நவீன வுசதியுடன் கூடிய RCH Centre of Excellence, சிறப்பு மகப்பேறு சிகிச்சை பிரிவு தொடங்கப்பட்டுள்ளது. 29 கோடி ரூபாயில் செவிலியர் குடியிருப்பு, பயிற்சி மாணவர் குடியிருப்பு மற்றும் மருத்துவமனை உணவு விடுதிகளுக்கு கூடுதல் கட்டடங்கள் தொடங்கப்பட்டு பொதுமக்களின் பயன்பாட்டிற்கு கொண்டுவரப்பட்டுள்ளது என்பதை இந்தத் தருணத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

சேலம் மாவட்டத்தில், ஒரு வருடத்தில் இரண்டு நடமாடும் பள்ளி மருத்துவக் குழுக்கள் ஏற்படுத்தப்பட்டு, 42 நடமாடும் மருத்துவக்குழு துவக்கி வைக்கப்பட்டுள்ளது. வருடந்தோறும் இரண்டு முறை பள்ளி மற்றும் அங்கன்வாடி மையங்களில் முகாம் நடத்தப்படுகிறது. இதுவரை 262 குழந்தைகளுக்கு முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டு திட்டத்தின் கீழ் இருதய அறுவை சிகிச்சை, 29 குழந்தைகளுக்கு தலா 4 லட்சம் ரூபாய் மதிப்புள்ள செவித்திறன் அறுவை சிகிச்சையும், 70 குழந்தைகளுக்கு அன்னப்பிளவு மற்றும் உதடுப்பிளவு அறுவை சிகிச்சையும் முதலமைச்சரின் மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதெல்லாம் அம்மாவினுடைய அரசு செய்த சாதனைகள். மக்கள் அனைவரும் நீண்டகாலம் நலமோடு வாழவேண்டும் என்ற சீரிய சிந்தனையோடு வாழ்ந்த அம்மாவினுடைய அரசால், அம்மா ஆரோக்கியத் திட்டம் தொடங்கப்பட்டு 30 வயதிற்கு மேற்பட்ட அனைவருக்கும் வருடம் ஒருமுறை அதாவது முழு உடல் பரிசோதனை செய்து கொள்ளும் வசதியை அனைத்து மாவட்ட அரசு ஆரம்ப சுகாதார நிலையம் ஏற்படுத்தப்பட்டது. சேலம் மாவட்டத்தில் 2 லட்சத்து 53 ஆயிரம் பயனாளிகள் பயனடைந்திருக்கிறார்கள். நம் உடலில் உள்ள நோயை தெளிவாக கண்டறிந்து, அதற்குத் தேவையான சிகிச்சையை அம்மாவினுடைய அரசு அளித்து வருகிறது. தொலைதூர கிராமத்தில் வசிக்கும் முதியோர்கள், கர்ப்பிணி தாய்மார்களுக்கு அவரவர் வசிக்கின்ற இடத்திலேயே மக்களை நாடிச் சென்று மருத்துவ சேவை வழங்கும் ஒரு வருடத்திற்கு ஒரு நடமாடும் மருத்துவமனை வீதம், சேலம் மாவட்டத்தில் 21 நடமாடும் மருத்துவமனை செயல்பட்டு வருகின்றது. இனிமேல், மருத்துவமனையை நாடி நீங்கள் போக வேண்டியதில்லை, உங்களுடைய பகுதிக்கே நடமாடும்

மருத்துவமனை வந்து, உங்களை பரிசோதனை செய்து, உங்கள் உடலிலே என்ன நோய் என்பதைக் கண்டறிந்து அதற்குத் தக்கவாறு சிகிச்சை அளிக்கக்கூடிய அரசாக, இன்றைக்கு அம்மாவினுடைய அரசு திகழ்ந்து கொண்டிருக்கின்றது என்பதை பெருமையோடு சொல்லிக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். அதேபோல, சேலம் மாவட்டத்தில் ஒவ்வொரு வட்டாரத்திலும், மூன்று சிறப்பு மருத்துவமுகாம் வீதம் **60** மருத்துவமுகாம் தொலைதூர கிராமங்களில் நடத்தப்பட்டு, **59247** பயனாளிகள் கடந்த ஆண்டு பரிசோதிக்கப்பட்டனர். அதில் **327** பயனாளிகள் உயர் சிகிச்சைக்காக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சரின் விரிவான காப்பீட்டுத் திட்டத்தில் பதிவுகள் செய்யப்பட்டுள்ளது. இவ்வாறு மக்கள் நலனில் அக்கறை கொண்டு எண்ணற்ற திட்டங்களை செயல்படுத்தி வருகிறது என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன். ஏனென்றால், இன்று இந்தியாவிலேயே சிறப்பான மருத்துவ சேவை செய்கின்ற ஒரே மாநிலம் தமிழ்நாடுதான், வேறு எங்கேயும் இதுபோன்ற மருத்துவ சேவை கிடையாது. ஆகவே, இந்தியாவிலே பல அரசு மருத்துவமனைகள் இருக்கின்றது, தலைமை மருத்துவமனைகள் இருக்கின்றது, எந்த மருத்துவமனையிலும், இரண்டு கைகள் இல்லாத ஒருவர் திண்டுக்கல் மாவட்டம், ஆத்தூர் சட்டமன்றத் தொகுதிகுட்பட்ட நாராயணசாமி என்பவர் ஐந்து வருடத்திற்கு முன்பு இரண்டு கைகளையும் இழந்துவிட்டார். அந்த இரண்டு கையிழந்த அவருக்கு ஸ்டான்லி மருத்துவமனையில், நம்முடைய அரசு மருத்துவரின் கடும் முயற்சியால், மருத்துவ குழுக்கள் அனைவரும் சேர்ந்து, இறந்தவர் உடலிலிருந்து இரண்டு கைகளை எடுத்து அவருக்கு பொருத்தப்பட்டு இரண்டு மாதமாகிறது. இந்தியாவிலே எந்த அரசு மருத்துவமனையிலும் இந்த சாதனை நிகழ்த்தவில்லை, இன்றைக்கு அம்மாவினுடைய அரசு தான் இந்த சாதனையை நிகழ்த்தி மருத்துவத் துறையிலே ஒரு மைல்கல்லை ஏற்படுத்தியிருக்கிறது, சாதாரண விஷயமல்ல. இரண்டு கையில்லாத ஒருவருக்கு, இறந்தவர் உடலிலிருந்து பொருத்தப்பட்டு இன்றைக்கு அவர் இரண்டு மாதமாக நலமாக இருக்கிறார், இன்னும் இரண்டு மாதத்தில் discharge ஆகி போய்விடுவார். எப்படியென்றால், மருத்துவத்துறை எந்த அளவிற்கு தமிழகத்திலே வளர்ந்திருக்கிறது என்பதை நீங்கள் எண்ணிப் பார்க்க வேண்டும். அதேபோல, மதுரையில் இருதயம் பாதிக்கப்பட்ட ஒருவரை இருதயத்தை எடுத்துவிட்டு, மாற்று இருதயத்தை பொருத்தி அவர் நலமுடன் இருக்கிறார், அரசு மருத்துவமனையில். தனியார் மருத்துவமனையில் எல்லாம் இதனை செய்திருக்கிறார்கள். ஆகவே, இன்றைக்கு நம்முடைய மருத்துவர்கள் சிறந்த முறையிலே மருத்துவ சேவையை செய்து, இப்படி பல்வேறு சிறப்புமிக்க அறுவை சிகிச்சையை செய்து, இன்றைக்கு இந்தியாவிலேயே உடல் உறுப்பு அறுவை சிகிச்சை செய்வதில் தொடர்ந்து மூன்றாண்டுகள் முதலிடத்திலே வகிக்கிறது. உடல் உறுப்பு மாற்று அறுவை சிகிச்சை என்பது ஒரு இறந்த ஒருவரிடத்தில் இருந்து எடுத்து, யாராவது நோய்வாய்ப்பட்டால் அவருடைய அந்த உறுப்பை மாற்றியமைக்கக்கூடிய அந்த முறையை,

இந்தியாவிலேயே தமிழ்நாடுதான் முதன்மையாக மூன்றாண்டுகள் தொடர்ந்து வகிக்கிறது. ஆகவே, மருத்துவசேவை அந்த அளவிற்கு தமிழகத்திலே வளர்ந்திருக்கிறது. நம்முடைய அரசு மருத்துவர்கள் சிறப்பான முறையிலே செயல்பட்டு, இந்த அரசுக்கும், பொதுமக்களுக்கும் சேவை செய்வதற்கு நான் அவர்களுக்கு இந்த நிகழ்ச்சியின் வாயிலாக பாராட்டுதல்களையும், நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

பெண்களுக்கு ஏராளமான திட்டங்கள் அம்மாவினுடைய ஆட்சியில்தான் கிடைக்கிறது. இன்றைக்கு எடப்பாடி தொகுதியில் பல்வேறு திட்டங்களை நிறைவேற்றிக் கொண்டிருக்கின்றோம்.

இன்றைக்கு பக்கநாட்டில் மட்டும் நிறைய திட்டத்தை நிறைவேற்றி தந்திருக்கின்றோம். ஜலகண்டபுரம், பக்கநாடு வரை தரமான சாலை வசதி செய்து கொடுத்திருக்கின்றோம். பக்கநாட்டிலிருந்து சித்தூர் வழியாக எடப்பாடி வரை தரமான சாலை வசதி, ஆனைபள்ளம் முதல் கல்லூரல்காடு, வேலகாளி முனியம்மன் கோவில், அம்மன்கோவில் காடு வழியாக பூலாம்பட்டி வன்னியர் நகர் வரை மேம்படுத்தப்பட்ட சாலைகள், மேட்டுத்தெரு முதல் அருவாய்பட்டி வரை மேம்படுத்தப்பட்ட சாலைகள், கொண்டப்பன்மேட்டில் ரூபாய் 1 கோடி மதிப்பீட்டில் பாலம், பக்கநாடு – கரியகாளியம்மன் கோவில் அருகில் ரூபாய் 1 கோடி மதிப்பீட்டில் பாலம், அதேபோல, குடும்ப நலத்துறையிலே ஆரம்ப சுகாதார நிலையங்களை திறந்து வைத்திருக்கிறோம். நீண்டநாள் கோரிக்கை வைத்தீர்கள், கால்நடை மருத்துவமனை கேட்டீர்கள், அதையும் அம்மாவினுடைய அரசு கொடுத்து அதற்குக் கட்டடமும் கட்டிக் கொடுத்துள்ளது. நீங்கள் கேட்ட கோரிக்கைகள் அனைத்தும் நிறைவேற்றப்பட்டது. அதுபோல், பேருந்து நிலையம் கேட்டீர்கள். ஜலகண்டபுரத்திலிருந்து ஈரோடு வரை பேருந்து இயக்கப்படுகின்றது. பூலாம்பட்டியிலிருந்து சேலத்திற்கு பேருந்து கேட்டீர்கள். அதையும் அம்மாவினுடைய ஆட்சியில் செய்து கொடுத்திருக்கின்றோம். இந்தப் பகுதி மக்கள் தேர்தல் நேரத்தில் வைத்த கோரிக்கைகள் அனைத்தையும் நிறைவேற்றிய அரசு அம்மாவினுடைய அரசு என்பதை இந்த தருணத்தில் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கின்றேன்.

பக்கநாடு, ஆடையூர், இருப்பாளி, சித்தூர் ஆகிய பகுதி மக்களுக்கு தேவையான திட்டங்களை நிறைவேற்றுவதில் நான் முனைப்போடு செயல்படுவேன் என்பதை இந்த தருணத்திலே தெரிவித்து, இன்றைக்கு கடுமையான வெயில் இருந்தாலும் அதையெல்லாம் பொருட்படுத்தாமல், இங்கே வந்து அமர்ந்து இந்த நிகழ்ச்சியிலே பங்குபெற்ற அத்தனை தாய்மார்களுக்கும், விவசாயப் பெருங்குடி மக்களுக்கும் மனமார, உளமார பாராட்டுக்களை தெரிவித்து, இந்த நிகழ்ச்சியின் வாயிலாக, இன்றைக்கு பல்வேறு துறையின் வாயிலாக, பல்வேறு

நலத்திட்டங்களை வழங்க இருக்கின்றோம். சுகாதாரம் மற்றும் குடும்பநலத் துறை, ஊரக வளர்ச்சித் துறை, வருவாய்த் துறை, வேளாண்மைத் துறை, வேளாண் பொறியியல் துறை, தோட்டக்கலைத் துறை, மீன்வளத் துறை, பட்டு வளர்ச்சித் துறை, மாற்றுத் திறனாளிகள் துறை, சமூகநலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை ஆகிய துறைகளின் வாயிலாக கிட்டத்தட்ட 30 கோடியே 28 லட்சம் ரூபாய் பெறுமான திட்டங்களைத் துவக்கி வைத்து, அடிக்கல் நாட்டி, பயனாளிகளுக்கு நலத் திட்டங்கள் வழங்குகின்ற விழாவாக இருக்கின்றது என்பதை சுட்டிக்காட்டி, நம்முடைய எடப்பாடி ஒன்றியத்தில் பல்வேறு திட்டங்களை நாம் நிறைவேற்றிக் கொண்டிருக்கின்றோம். ஏற்கனவே, கூட்டுக் குடிநீர் திட்டத்தின் மூலமாக, கிராமத்திலே வாழ்கின்ற மக்களுக்கு பாதுகாப்பான குடிநீர் வழங்கக்கூடிய சூழ்நிலையை நாங்கள் உருவாக்கித் தந்திருக்கின்றோம் என்பதை சுட்டிக்காட்டி, இந்தப் பகுதிக்கு தேவையான அத்தனை அடிப்படை வசதிகளையும் செய்து கொடுக்க அம்மாவினுடைய அரசு செயல்படும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்து, மிகச் சிறப்பாக, எழுச்சியாக இந்த நிகழ்ச்சியை ஏற்படுத்திய அத்தனை நல்ல உள்ளங்களுக்கும் நன்றி தெரிவித்து விடை பெறுகின்றேன்.

நன்றி,

வணக்கம்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**